
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1171

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

56

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

ஓவியம் : சிகரன்



# உடையார்பாளையத்தை உலுக்கிய படுகொலை!

ஆசிரியர் என்ற அளவில், பள்ளி மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பது, இடையிடையே சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பேசுவது என்ற அளவில் மட்டும் வேலாயுதம் இருக்கவில்லை. பெண்கள் பொதுவெளியில் தலைநிமிர்ந்துகூட நடக்க இயலாத அளவுக்கு ஆணாதிக்கச் சிந்தனைகள் தலைவிரித்தாடிய அந்தக் காலத்திலேயே, தன் மகள் மங்கையர்க்கரசியை மேடையேற்றிப் பேசச் செய்தார். கூந்தல் வளர்த்து, அதைப் பராமரிப்பது வீண் வேலை என 'கிராப்' வெட்டிக்கொள்ளச் செய்தார். மிதிவண்டி ஓட்ட கற்றுக்கொடுத்தார். கணவரை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்துவைத்தார். சாதி மறுப்புத் திருமணங்களை நடத்திவைத்தார்.

'உயர் சாதிக்காரர்களை 'ஆண்டை' என்றோ 'எசமான்' என்றோ அழைக்காதீர்கள்' எனத் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். உணவு விடுதி ஒன்றுக்கு, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தன்னுடைய நண்பரோடு சென்றபோது, அனுமதிக்க மறுத்த அந்த உணவகத்தின் உரிமையாளருடன் கடும்விவாதம் செய்து, இருவரும் உணவருந்திவிட்டே அங்கிருந்து வெளியேறினர். இச்செயல்கள் எல்லாம் பழைமைவாதிகள் பலருக்கு எரிச்சலை ஏற்படுத்தின. இவரை இனியும் விட்டுவைக்கக் கூடாது என்று சதித்திட்டம் தீட்டினர்.

13.11.1947 அன்று காலை, உடையார்பாளையம் பெரிய ஏரியின் மேற்குப் பக்கம் அமைந்திருந்த கோயில் மண்டபத்தில் வைத்து, வேலாயுதத்தை அடையாளம் தெரியாத நபர்கள் கழுத்தை நெரித்துக் கொன்றனர். பின்னர், உடலை அருகே இருந்த பலா மரத்தில், ஆடைகளின்றி கட்டித் தொங்கவிட்டுச் சென்றனர். மறுநாள் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்திலும் வேலாயுதம் படுகொலை செய்யப்பட்ட செய்தி வெளியானது. இந்தக் கொடூர சம்பவத்தைத் தற்கொலை என்று மாற்றிட சூழ்ச்சிகள் நடந்தன. வழக்கு தொடுக்கப் படாமலேயே காவல் துறையும் காலம் கடத்தியது. ஆனால், கொலையைக் கண்டித்தும், அங்கு நடக்கும் சூழ்ச்சிகளையும் தொடர்ந்து அம்பலப்படுத்திக்கொண்டே வந்தது 'விடுதலை' ஏடு.

1948-ஆம் ஆண்டு ஜனவரியில், பெரியார் நேரடியாக உடையார் பாளையத்திற்குச் சென்று, வேலாயுதம் கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார். வேலாயுதத்தின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அன்று இரவே கூட்டம் ஒன்றை நடத்தி, காவல் துறையின் மெத்தனத்தைக் கண்டித்துப் பேசினார். அண்ணா, கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், ஈ.வெ.கி.சம்பத் எனப் பலரும் வேலாயுதம் வீட்டிற்குச் சென்று ஆறுதல் தெரிவித்தனர். வேலாயுதம் வழக்கு அரசுக்கு நெருக்கடியாக மாறிய சூழலில், அன்றைய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அரசு, விசாரணைக்காகத் தனி நீதிமன்றம் ஒன்றை அமைத்தது. ஆனால், நீதிதான் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களின் பட்டியலை 13.6.1948 அன்று 'விடுதலை'யில் வெளியிட்டார் பெரியார். பள்ளி ஆசிரியர்களாக இருந்த வைத்தியநாத அய்யர், முத்துசாமி சாஸ்திரி உட்பட 10 பேர் இவ்வழக்கில் கைதுசெய்யப்பட்டனர். ஜெயங்கொண்டம் தொகுதியின் அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த பி.வெங்கடாசலம், நடராசன், சண்முகசுந்தரம் ஆகிய மூவர் தலைமறைவாக இருந்தனர் என்கிறது 'விடுதலை' ஏடு. பார்ப்பனியமும் பணமுதலைகளும் சேர்ந்து செய்த படுகொலையாக வரலாற்றில் இன்றும் அப்பகுதியில் அறியப்படுகிறது வேலாயுதம் வழக்கு. வேலாயுதம் மறைந்துவிட்டார் என யாரும் அங்கு கல்வியில் இருந்து வெளியேறிவிடவில்லை, ஆதிக்கவாதிகளால் சாதி இறுக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் முடியவில்லை.

...பயணம் தொடரும்

## தமிழ்நாட்டை அவமதிக்கிறது பா.ஜ.க!

தமிழ்நாட்டில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துவிட்டதாகவும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் பெருகிவிட்டதாகவும், பா.ஜ.க.வின் முன்னாள் தேசியத் தலைவரும் ஒன்றிய அமைச்சருமான ஜே.பி.நட்டா பேசியிருக்கிறார். தரவுகளின் அடிப்படையில் பார்த்தால், இதில் துளி அளவும் உண்மை இருக்கிறதா என்றால், நிச்சயம் இல்லை. தேசியக் குற்ற ஆவணக் காப்பகத் (என்.சி.ஆர்.பி.) தரவுகளின்படி, தமிழ்நாட்டில் முந்தைய 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியைக்காட்டிலும் தற்போது குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்தே உள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களான 2012-இல் 1,943 கொலைகள், 2013-இல் 1,927 கொலைகள், 2019-இல் 1,745 கொலைகள், 2020-இல் 1,661 கொலைகள் என்பதுதான் கடந்த 15 ஆண்டுகளில் பதிவான மிக அதிகமான எண்ணிக்கை. உத்தரப்பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலோ, தமிழ்நாட்டைவிட பல மடங்கு அதிகமான எண்ணிக்கையில் குற்றச்சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதும் என்.சி.ஆர்.பி. தரவுகள் உணர்த்துகின்றன.

என்.சி.ஆர்.பி.யின் 2024-ஆம் ஆண்டுக்கான தரவுகளின்படி, தமிழ்நாட்டில் அபின், மார்பின் போன்ற போதைப் பொருள்கள் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், குஜராத், ஹரியானா போன்ற மாநிலங்களில், அபின் அதிகமாகப் புழக்கத்தில் இருக்கிறது. 2024-ஆம் ஆண்டில், ஒட்டுமொத்தமாகப் போதைப் பொருள்கள் காரணமாக மாநிலவாரியாகப் பதிவான வழக்குகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் 481 என்ற அளவில்தான் உள்ளது. ஆனால், மகாராஷ்டிராவில் 14,553 வழக்குகளும் உத்தரப்பிரதேசத்தில் 6,204 வழக்குகளும் பதிவாகியுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில், தமிழ்நாட்டுக்கு என்ன செய்தோம் என்பதைச் சொல்லித்தான் மக்களிடம் வாக்கு கேட்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். அதே போல ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ஏதாவது செய்திருந்தால், அதைச் சொல்லி பா.ஜ.க. வாக்கு கேட்கலாம். ஆனால், உரிமைகளைப் பறித்ததைத் தவிர, அநீதிகளை இழைத்ததைத் தவிர பா.ஜ.க. தமிழ்நாட்டுக்குச் செய்தது என்றால், ஒன்றும் இல்லை. அதனால்தான், அவதூறுப் பிரச்சாரத்தைக் கையிலெடுத்து, தமிழ்நாட்டை அவமதிக்கப் பார்க்கிறார்கள் பா.ஜ.க.வினர்.

## ஃப்ளாஷ்பேக்





டி.ராஜவேலு

### கொரோனா காலத்திலும் தலைவரின் பயணம்!

2019-ஆம் ஆண்டில், கொரோனா அலை தொடங்கியிருந்த நேரத்தில், சேலம் மாவட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவராக வருகைதந்த இன்றைய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை விமான நிலையத்தில் வரவேற்று மரியாதை செய்தேன். கழகத் தலைவரை முதன்முறையாக அருகில் சந்தித்து, புகைப்படம் எடுத்துக்கொண்ட தருணத்தின் உற்சாகமும் மகிழ்ச்சியும் என்றும் மறக்க முடியாதது.

**– டி.ராஜவேலு, வர்த்தகர் அணி, மாவட்டத் துணை அமைப்பாளர், சேலம் மேற்கு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

106

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."




# தொகுதி மறுவரையறை ஜனநாயக விரோதம்!

**பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் கொண்டு வரப்படும் இடஒதுக்கீட்டை, தி.மு.க. விரும்பாததால்தான் தொகுதி மறுவரையறை பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுவதாக, எடப்பாடி பழனிசாமியும், தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் பியூஷ் கோயலும் சொல்கிறார்களே?**

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது என்று கிராமப்புறங்களில் சொல்வார்கள். அதாவது, பொருத்தமில்லாத இரண்டை ஒப்பிடுகிறார் எடப்பாடி பழனிசாமி. 1996-இல் முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர், உள்ளாட்சி அமைப்புகளில் 33% பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கி மேயர், சேர்மன், கவுன்சிலர் என அனைத்து நிலைகளிலும், பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி, தேர்தலை நடத்திக் காட்டினார். கழகத் தலைவர், கடந்த 2022-ஆம் ஆண்டு நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், பெண்களுக்கு 50% வழங்கியதன் காரணமாகத் தமிழ்நாட்டில் உள்ள 21 மேயர் பொறுப்புகளில் 11 பெண்கள் மேயர்களாக இருக்கிறார்கள். சென்னை மேயரும் பெண்தான், சென்னை கவுன்சிலர்களில் 50%-க்கு மேல் பெண்கள் உள்ளனர். இதுதான் தமிழ்நாடு முழுவதுமான உள்ளாட்சிகளின் நிலை. பெண்களின் உரிமைக்கான முன்னெடுப்புகளில் தி.மு.க.வை விஞ்ச, இந்தியாவிலேயே இன்னொரு கட்சி கிடையாது. எடப்பாடி பழனிசாமி, இது எதுவும் தெரியாதது போல நடிக்கிறார்.

தி.மு.க. எதிர்ப்பது, நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறையைத்தான். தற்போது, 543 மக்களவைத் தொகுதிகள் (லோக்சபா) உள்ளன. அதை 888ஆக உயர்த்த பா.ஜ.க. அரசு திட்டமிட்டுள்ளது. அதற்கேற்பத்தான் புதிய நாடாளுமன்றக் கட்டடம் வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

உயர்த்தப்படும் தொகுதிகளில், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கான எண்ணிக்கை எவ்வளவு என்பதை வெளிப்படையாக அறிவிப்பதில் பிரதமர் மோடிக்கும் பா.ஜ.க. அரசுக்கும் தயக்கம் ஏன்? காரணம், மாநிலங்களின் மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுவரையறை செய்ய இருப்பதால்தான். இதன் அடிப்படையில் பார்த்தால், குடும்பக்கட்டுப்பாடு உள்ளிட்ட ஒன்றிய அரசின் திட்டங்களைச் சரியாகச் செயல்படுத்தி, மக்கள்தொகை அளவிலும் - மாநில வளர்ச்சியிலும் சிறந்து விளங்கும் தமிழ்நாடும், தென்மாநிலங்களும், பிற பகுதிகளில் உள்ள சில மாநிலங்களும் தங்களுக்கான எம்.பி. தொகுதி எண்ணிக்கையை இழக்கும். அரசின் திட்டங்களைப் பின்பற்றாத உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் வடமாநிலங்கள் மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாகக் கூடுதல் தொகுதிகளைப் பெறும்.

நாட்டின் ஒரு பகுதி மக்களின் வாக்குரிமையை அலட்சியப்படுத்தி, அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் ஜனநாயக விரோதப் போக்கு இது என்பதால்தான், தி.மு.க. தலைவரான தமிழ்நாடு முதலமைச்சர் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார். பாதிக்கப்படும் மாநிலங்களையும் ஒருங்கிணைக்கிறார்.

நாடாளுமன்ற மக்களவையில், தற்போது தமிழ்நாட்டின் 39 தொகுதிகளின் விகிதம் என்பது 7.18 விழுக்காடாகும். தொகுதி மறுவரையறைக்குப் பிறகு, இதே விகிதத்தில் தமிழ்நாட்டிற்கான தொகுதிகள் அமையும் என்பதை வாய்கிழியப் பேசும் பியூஷ் கோயல் மற்றும் தமிழ்நாட்டில் ஓட்டு கேட்க வரும் பிரதமர் உள்ளிட்டவர்களால் உறுதி தர முடியுமா?

...வினா தொடரும்.

## மாநில உரிமைகளுக்குப் பாடுபடுவோம்!

1967-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை மாநில உரிமைகளைப் பாதுகாக்க வலியுறுத்தியது. 'மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒரே சீராக எல்லா மாநிலங்களுக்கும் அமைவதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவும், குறிப்பிடப்படாத மிச்ச அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள முறையை மாற்றி, அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்குக் கழகம் பாடுபடுவதுடன், அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது' என்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900